### நன்செய்-புன்செய் நிலம் நிறைந்த விவசாயப் பகுதி!

# முசிறிக்கு கொல்லிமலை - காவிரி ஆற்றுநீர் வர நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் முசிறி ந.தியாகராஜன் கோரிக்கை!

சென்னை, ஏப்.21-

**சட்டப்பேரவையில் சமூக நலத்துறை மானியக் கோரிக்கையில் முசிறி தொகுதி உறுப்பினர் ந.தியாகராஜன் பேசுகையில் முசிறிக்கு கொல்லிமலை தண்ணீர், காவிரி ஆற்று நீர் வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் சமூக நலத்துறையில் முசிறி தொகுதி உறுப்பினர் ந.தியாகராஜன் பேசியதாவது:-

அறியாமை இருள் அகற்ற, அறிவையும் தான் வளர்க்க, புரியாததைப் புரிய வைத்த பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், அறிவின் உச்சம், எளிமையின் சிகரம், அறிஞர் அண்ணா, அறிஞர் அண்ணாவின் அன்பு தம்பி நீ, தமிழ் நாட்டின் தன்னிகரில்லா தலைவன் நீ, தமிழே உன் தாயானால், தமிழே உன் தாயானால் அதன் தத்துப் பிள்ளை நீ ஆவாய், வள்ளுவனோ தமிழுக்கு சிறப்பு சேர்த்தான் அவன் அதிகாரத்தில், நீயோ வள்ளுவனுக்கே சிறப்பு சேர்த்தாய் உன் அதிகாரத்தில். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் கலைஞர், முப்பெருந்தலை வர்களை வணங்குகிறேன். தமிழ் நாட்டை மட்டுமல்ல ஒன்றியத்தின் விழுமியங்க ளையும் நீதான் காப்பாயென காத்திருக்கிறது காலம். தமிழ் நாட்டை மட்டுமல்ல ஒன்றியத்தின் விழுமி யங்களையும் நீதான் காப்பாயென காத்திருக்கிறது காலம். குவிக்கப்பட்ட அதிகாரங்கள் உன் குரலில் உடைகின்றன. குவிக்க ப்பட்ட அதிகாரங்கள் உன் குரலில் உடை கின்றன. நீதிமன்றத்தில் நிகழ்ந்தது, நீதிமன்றத்தில் நிகழ்ந்தது அருமையாக இருக்கிறது, பெருமையாகவும் இருக்கிறது. எதை எப்படி செய்வதென உன் செயலை வரலாறு குறித்துக் கொள்கிறது. மக்களாட்சியின் மாண்புகளை பீடாதிபதிகளுக்கு போதிக்கிறாய். நீதியின் நெற்றிக்கண் திறப்பு உன்னால் நிகழ்கிறது. தலையில் குட்டு வைப்பதல்ல, கன்னத்தில் அறையும் கரங்களை உருவாக்குகிறாய். தலையில் குட்டு வைப்பதல்ல, கன்னத்தில் அறையும் கரங்களை உருவாக்குகிறாய். நூற்றாண்டுக் கால வரலாற்றின் நுட்பத்தைப் படிப்பினைகளாக்கி வழங்குகிறாய். காலம் தடுமாறுமென காத்திருந்தவர்கள், காலம் தடுமாறுமென காத்திருந்தவர்கள் நிமிரும் அழகில் நிலைகுலைகிறார்கள், நிமிரும் அழகில் நிலைகுலைகிறார்கள். சொல் தலைவனே இப்படித்தான் இருக்குமோ! வசந்தத்தின் இடிமுழக்கம். சொல் தலைவனே வசந்தத்தின் இடிமுழக்கம் இப்படித்தான் இருக்குமோ! வாழ்க தமிழக முதல்வர்! வெல்க முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! (மேசையைத் தட்டும் ஒலி)



உதயநிதி, உதயநிதி ஒற்றைத் தலை மனிதனல்ல, உதயநிதி ஒற்றைத் தலை மனிதனல்ல. பத்து தலை கொண்ட இராவண வம்சம்; பத்து தலை கொண்ட இராவண வம்சம்; சனாதன அழுக்கை வெளுக்க வந்த சூரிய குமாரன்; சனாதன அழுக்கை வெளுக்க வந்த சூரிய குமாரன்; உங்கள் வாள்களையெல்லாம் நேர்கொள்ளும் அரசியல் மார்பு அவனுடையது. ஈரோட்டு தாது தின்று செரித்த உடலும், ஈரோட்டு தாது தின்று செரித்த உடலும், காஞ்சி மூலிகையால் கைபெற்ற நோயெதிர்ப்பும், காஞ்சி மூலிகையால் கைபெற்ற நோயெதிர்ப்பும், திருவாரூர் ஆசான் பயிற்சி பள்ளியும் அவனது ஆற்றலை என்றும் நிலைக்கச் செய்யும். திராவிட இனத்தின் தலைமை தளபதி, அவனொரு அறைகூவல் திராவிட பாசறையில் பிறந்த ஆயுதம். வளர்க இன தமிழினத் தலைவர், தமிழின இளந்தலைவர் வழிகாட்டும் துணை முதல்வர் அவர்கள்.

எனக்கு இந்த துறையில் பேச வாய்ப்பளித்த எங்களது தமிழக முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், அனைத்தும் அறிந்த நமது அவை முன்னவர் அவர்களுக்கும். . .

தீரரின் கோட்டமாம் திருச்சியை வலிமையோடும், தலைமைக்கு நம்பிக்கையோடும் நடத்தி, போராட்டக் களத்தில், முத்தமிழறிஞர் தலைவர், கலைஞர் அவர்களை ஒத்து, இன்றைக்குப் போராடி வெற்றிபெறும் எங்களது மலைக்கோட்ட மாவட்டத்து நகர்ப்புறத் துறையின் அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், எங்களது அவை முன்னவர், அரசு கொறடா உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நூற்றாண்டுகால வரலாற்று சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையில் எனக்கு உரையாற்ற வாய்ப்பளித்த எங்களது முசிறி சட்டமன்ற தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை ஆளாக்கி, பேரவையின் உறுப்பினராக இன்றைக்கு உருவாக்கிய என் பெற்றோர், தாய் தந்தையருக்கும், சகோதர சகோதரிகளுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் வெற்றிக்கு அரும்பாடுபட்டு, தொடர்ந்து என்னுடன் குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் நமது ஒன்றிய கழக நிர்வாகி களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை கூற மறந்துவிட்டேன். அமைச்சர் அவர்கள் எனக்கு ஒருவகையில் சொந்தமாவார்கள். எங்கள் தொகுதியில் விவசாயம் அதிக அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழக உடன்பிறப்புகள், முசிறி சட்டமன்ற தொகுதி, திருச்சி வடக்கு மாவட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் முரட்டுப் பக்தன் என்று அழைக்கப்படும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அய்யா பெரியசாமி அவர்களுக்கும், சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

#### மகளிர்க்கான திட்டங்கள்!

எங்கள் தலைவர் முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு சமூக நலத் துறையில் தாய்மையும், பெண்மையும்தான் உலகத்தை வழிநடத்துகிறது என்ற குறிக்கோளோடு பெண் குலத்தை, தாய்க் குலத்தினை உயர்த்திக்கொண்டிருக் கின்றார்கள். சொல்லவேண்டுமானால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் காலத்தில், மகளிர் காவல் துறையில் பணியாற்ற வாய்ப்பு வழங்கினார்கள். விதவை மறுமணத் திட்டத்தை உருவாக்கினார்கள். மகளிருக்கு சொத்துரிமை வழங்கி, இன்றைக்கு அதே மகளிருக்கு தலைவர் தளபதி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், பதிவுத் துறையில் மகளிருக்கு 1 சதவிகிதம் வரிவிலக்கு செய்திருக்கிறார்கள். அரசுப் பணியில், 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கியது, இந்த தி.மு.க. அரசு. தொடக்கப் பள்ளியில் பெண்களே ஆசிரியர்களாகவும், தருமபுரியில் சுய உதவிக் குழுத் திட்டத்தை உருவாக்கியதும், கர்ப்பிணிப் பெண்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டத்தை உருவாக்கியதும், இ.வே.ரா நாகம்மை ஏழை மகளிர் இலவச பட்டப் படிப்பை உருவாக்கியதும், 10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு 10,000 ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டத்தை உருவாக்கியதும், மகளிருக்கு இலவச ஆட்டோரிக்ஷா வழங்கியதும், பெண்களுக்கு 6 தொழிற்பயிற்சி நிலையங்களை உருவாக்கியதும், முதல் முறையாக தொழில் முனையும் மகளிர் 250 பேருக்கு தலா ரூ.50,000/ மானியம் வழங்கும் திட்டத்தை உருவாக்கியதும், தொழிற்வளாகங்களில் தொழில்மனைகள் ஒதுக்கீட்டில் 10 சதவிகிதம் மனைகள் வழங்கும் திட்டத்தை உருவாக்கியதும்,

மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 25 வாகனங்கள் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தியதும், ஈரோடு, திண்டல் என்ற இடத்தில் மலைமீது அமைந்துள்ள முருகன் கோவிலுக்கு அருகில், மலைமீது ஒரு பெரிய முருகன் சிலை அமைப்பதாக ஒரு மகிழ்ச்சியான செய்தி வருகிறது. அப்படி அமைந்தால், அமைக்கப் பட்டால், அவ்வாறு அமைப்பதற்கான திட்டத்தை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை வைத்துள்ளதா என்ற கேள்வியையும் கேட்டு, தொடர்ந்து எல்லாத் துறைகளிலும் கேள்விகளைக் கேட்க வேண்டும். எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட. . .

அதேபோல தலைவர் இன்றைக்கு மகளிருக்காக, மகளிர் உரிமைத் தொகை ரூ.1,000/ வழங்கியதும், மகளிர் விடியல் பயணத் திட்டத்தை உருவாக்கியதும், ஏழை எளிய தாழ்த்தப்பட்ட விளிம்புநிலை மக்களெல்லாம் உயர வேண்டும் என்ற நோக்கத்தோடு, உயர் படிப்பிற்கு ஆயிரம் ரூபாய் வழங்கியது, இன்றைக்கு பெரிய மாற்றமாக இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், எங்களது மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதில் உயர்ந்து நிற்கின்றார்கள். எங்குப் பார்த்தாலும் பள்ளி மாணவச் செல்வங்கள். இதனால் இந்திய அளவில், இங்கே தமிழ்நாட்டில் மட்டும் 54 சதவிகிதம் அதிகமாக இருக்கின்றது. அந்த அளவிற்கு உயர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் திருச்சி மாவட்டம் என்றால் உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் எங்கள் அமைச்சர்கள். இரண்டு அமைச்சர்களும் போட்டி போட்டு க்கொண்டு இன்றைக்கு இந்த அரசாங்கத்தை வழிநடத்துகின்றார்கள். இந்தத் தருணத்தில் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து க்கொள்கின்றேன்.

எங்கள் தொகுதி நன்செய் நிலமும், புன்செய் நிலமும் நிறைந்த விவசாயப் பகுதியாகும். அந்தப் பகுதியில் நாங்கள் ஒரு check dam அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அதை அமைத்துக் கொடுத்தால்தான் எங்களுக்கு வாழ்வாதாரமே ஏற்படும். தலைவர் கலைஞர் அவர்கள் குளித்தலை தொகுதியில் போட்டியிட்ட காரணத்தினால் முசிறி பாலம் ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு பிறகு, அடுத்ததும் தலைவர் கலைஞர் அவர்கள் வந்தார்கள். மாயனூர் check dam அமைக்கப்பட்டது. அதன்மூலம் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்தார்கள்.

தற்போதைய கரூர் தொகுதியைச் சேர்ந்த மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல வளமான அமைச்சர்; அவரும் எங்களுக்கு ஒரு பாலத்தைக் கொடுத்துவிட்டார். அதனால், கொங்கு belt லிலுள்ள textile companiesஐ எங்கள் பகுதிகளிலும் அமைக்க வேண்டும். அவை அமைக்கப் படுகின்ற வரையில் எங்களுக்கு விவசா யத்தை விட்டால் வேறு வழியில்லை. நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவதை தொலைக்காட்சியில் எங்கள் தொகுதி மக்கள் பார்க்கிறார்கள்.

அதில் அவர்கள் நிதியில்லை என்று சொல்கிறார்கள் என்று அவர்களிடம் சொன்னபோது, எம்.ஜி.ஆர்.ஐ மிகவும் பிடித்த வயதான ஒருவர் ஒரு பாட்டு பாடினார். அவர் என்ன பாட்டு பாடினார் என்றால், (குறுக்கீடு) எம்.ஜி.ஆர். பாட்டு என்றவுடன், நம்முடைய உறுப்பினர்களெல்லாம் அப்படியே உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்காரு கிறார்கள். "என்ன வளம் இல்லை இந்தத் திரு நாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்!" என்ற பாடலைப் பாடி, வளமான இந்தத் தமிழ்நாட்டை விட்டு விட்டு நாம் ஏன் வெளியில் கையை ஏந்த வேண்டும். அதனால், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, நமக்கான நிதியை மத்திய அரசு தரவில்லை என்பது தெரிந்துவிட்டது. நான்கு வருடங்கள் ஆகிவிட்டன; மத்திய அரசு நிதி வழங்கியதா? நிதியைக் கொடுக்காமல் உங்களுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துகிறது. அமைச்சர் அவர்களுக்கு வேலூர் தொகுதி முழுவதும் அத்துப்படி என்று அவர் சொல்கிறார். அவர் ஒரு வன்னியர். அதனால், அவர் என்ன சொல்கிறார் என்றால், நீங்கள் சொல்லுங்கள். அவர் வேலூரில்தான் படித்து வளர்ந்தார். check dam அவசியம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். எங்களுக்கு அவரை விட்டால் வேறு கதியில்லை. முதலமைச்சர் அவர்கள் கூறினாலும் சரி, துணை முதலமைச்சர் அவர்கள் கூறினாலும் சரி, எந்த அமைச்சர் கூறினாலும் சரி, அவர் மனம் திறந்தால்தான் கொல்லிமலைத் தண்ணீர் முசிறிக்கு வரும். அதேபோல காவிரி தண்ணீர் எங்களுக்கு பாயும்.

வேறு வழியில்லை. அவர் ஒருவர் கண் திறந்தால் முசிறி மிகப்பெரிய சக்தியாக உருவெடுக்கும். எங்களுடைய மாவட்டத்தில் முசிறி தொகுதி இருக்கிறது. முசிறி, துறையூர், மண்ணச்சநல்லூர் உள்ளிட்ட தொகுதிகளையும் உள்ளடக்கி, திருச்சி மாவட்டம் பெரிய மாவட்டமாக வளர்ந்துகொண்டு வருகிறது. ஆதலால், முசிறியைத் தலைமையிடமாகக் கொண்டு, எங்களுக்கு தனி மாவட்டமாக அமைத்துத் தர நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டம்தான்.

நாலடியாரில் வரலாற்றுப் புகழ்பெற்ற முத்தரை யர்கள் 27 பெயர்களில் மாநிலம் முழுவதும் வாழ்கின்றார்கள். அந்த 27 பெயர்களையும், முத்தரையர் என ஒரே பெயரில் அழைக்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசாணை வெளியிட ப்பட்டுள்ளது. அவர்களில் ஒரு பிரிவினர் பிற்படுத்த ப்பட்டவர்கள் என்றும், ஒரு பிரிவினர் மிகவும் பிற்படுத்த ப்பட்டவர்கள் என்றும் இரு பிரிவுகள் ஆக பிரிக்கப்பட்டுள்ளனர். இந்த சமுதாய மக்களிடையே இது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அதை நமது தளபதியார் அவர்கள் தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த சமுதாய மக்களின் கவலையை அகற்றுவதில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு இதை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அடுத்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினராக 1996, 2006 ஆம் ஆண்டுகளில் கழக ஆட்சியில் முத்தரை யர்கள் நியமிக்கப்பட்டார்கள். தற்பொழுது நலிவடைந்தவர்களுக்கு வலிமை சேர்த்திடும் எங்கள் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்கள், முத்தரையர் சமுதாயம் சார்ந்த ஒருவரை அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினராக நியமித்து, முத்தரையர் சமுதாய மக்களின் மனக்குறையைப் போக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ந.தியாகராஜன் பேசினார்.

---

ஈரோடு வடக்கு மாவட்டம் – முன்னாள் எம்.எல்.ஏ.

## ஓ.எஸ்.சுப்பிரமணியம் மனைவி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 21-

ஈரோடுவடக்கு மாவட்டக்கழக தலைமைச்செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஓ.எஸ்.சுப்பிரமணியம் அவர்களின் மனைவி திருமதி எஸ்.லட்சுமி அம்மாள் அவர்கள் நேற்று முன்தினம் (19.4.2025 - சனிக்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை, மனைவியை இழந்து வாடும் முன்னாள் எம்.எல்.ஏ., ஓ.எஸ். சுப்பிரமணியனுக்கும், அன்னாரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.

---



ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் தீரன் சின்னமலை திருவுருவப் படத்திற்கு அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், வீரமணி ஜெயக்குமார், ஆ.செந்தில்குமார், அ.செல்லபொன்னி, டி.எஸ்.குமாரசாமி, என்.டி..பத்மநாபன், ஆர்.பொன்னுசாமி, சு.குணசேகரன், ஆர்.விஜயகுமார், டி.சதாசிவம், வி. செல்வராஜ், வி.சி.நடராஜன், பொ.இராமசந்திரன், த.விஸ்வநாதன், பொ.கோவிந்தசாமி உள்ளிட்ட கலந்து கொண்டனர்.



தர்மபுரி நகரகழக செயலாளர் நாட்டான்.மாது ஏற்பாட்டில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ மணி எம்.பி. கலந்துகொண்டு வர இருக்கும் 2026 பொது தேர்தலில் பணியாற்றுவது மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து விளக்கி பேசினார். கூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி,மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகாதேவி,நகர அவைத் தலைவர் அழகுவேல்,நகர கழக துணை செயலாளர் த. வே. முல்லைவேந்தன்,நகர நிர்வாகிகள் அன்பழகன், கோமளவள்ளி ரவி, சம்பந்தம், சுருளிராஜன், கனகராஜ், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் மே. அன்பழகன்,ஒன்றிய கழக செயலாளர்கள் டி.எல்.காவேரி, ஏ.எஸ்.சண்முகம் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் இல்லம் தோறும் மாணவரணி உறுப்பினர் சேர்க்கை முகாம் அன்னவாசல் தெற்கு ஒன்றியம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ். ச. இளையசூரியன் வரவேற்புரையினும், தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பெ.தெய்வானை, சபா(எ) ரத்தின சபாபதி, கோ.அண்ணாத்துரை, பி.சதீஷ்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட் டம் திருமருகல் தெற்கு ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், தகவல் தொழில் நுட்ப அணி பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம் கோட்டூர் ஊராட்சி ஏனநல்லூர் மாரியம்மன் கோயில் அருகே நடைபெற்றது கூட்டத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம்,திருமருகல் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.டி.எல். சரவணன் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவ நாள் விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியதை தொடர்ந்து, நாகை மாவட்டம் ஒரத்தூர் அரசு மருத்துவகல்லூரி கலையரங்கத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நாகை மாவட்ட கழக செயலாளரும், , தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் வழங்கினார் உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் .ப.ஆகாஷ், கீழ்வேளுர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில், பொறியாளர் அணி ஒன்றிய,நகர, பேரூர் கழக பொறுப்புகளுக்கு நேர்காணல், மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினார்கள். இதில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை சி.பாஸ்கர், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் அழகு.நீலமேகம், ஒன்றிய கழகச் செயலாளர்கள் செ.நல்லதம்பி, சி.ராஜேந்திரன், தி.மதியழகன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர். குமார், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் தி.இராசா,பொறியாளர் அணி மாவட்ட தலைவர் பி.எஸ்.வேல்முருகன், மாவட்ட துணைத்தலைவர் பி.செல்லச்சாமி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.பெரியசாமி, ஜி.கே.மூர்த்தி, ஆர்.ரவிச்சந்திரன், ஆர்.ராஜாராம், ஜி.ராஜசேகர் மற்றும் கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.